Deposition of Witness
(Chapter:XXIII Code of Civil procedure)
In the Court of District Munsif Court,
Thiruvadanai.

Case No. O.S. No. 252/1995
Deposition of Witness of : DW – 1

Name : புகழேந்தி

Father/Husband Name : கருப்பையா

Village :

Taluk :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 03.03.2026

**குறுக்கு விசாரணை**

1. வாதி என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்தின் சர்வே எண் என்னவென்றால் தற்போது எனக்கு நினைவில் இல்லை. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்தின் நான்குமால் என்னவென்றால் அந்தவிவரம் எனக்கு தெரியாது. வாதி தாக்கல செய்துள்ள தாவா சொத்து உள்ளடக்கிய சர்வே எண் 44/2 ல் கண்டுள்ள சொத்தின் மொத்த விஸ்திரனம் 13 ஏக்கர் 74 சென்ட் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. வாதி எந்த ஆவணத்தின் மூலம் சொத்திற்கு உரிமை கோருகிறார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. சொத்தை எனது அப்பா வாங்கினார். சர்வே எண் 44/2 பி சொத்திற்கு மேற்கே தென்வடலாக ராமநாதபுரம் – திருச்சி தேசிய நெடுஞ்சாலை உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்44/2 பி சொத்திற்கு வடக்கே ரைஸ்மில் காம்ப்வுண்டும் ரகுநாதன் புஞ்சையும், மதுரை தொண்டி சாலை உள்ளது என்றால் மதுரை தொண்டி சாலை உள்ளது ஏனைய விவரங்கள் எனக்கு தெரியாது.

2. சர்வே எண்.44/2 பி சொத்திற்கு வடக்கே ரைஸ்மில் உள்ளது என்றால் அந்த விவரம்

எனக்கு தெரியாது. சொத்தை எனது தகப்பனார் வாங்கினார். சர்வே எண்.44/2 பி சொத்திற்கு கிழக்கே மாங்குடி எல்லை உள்ளதுஎன்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. சொத்தை எனது தகப்பனார் வாங்கினார். தாவா சொத்திற்கு தெற்கே எனது தகப்பனார் கிரையம் பெற்ற சொத்து உள்ளது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. ( சாட்சி நியாபகம் இல்லை என்று தெரிவித்ததாக சொன்னார்) .வாதி தாக்கல்செய்துள்ள பிராதை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. எனது தகப்பனார் கருப்பையாவுக்கு காளியம்மாள் என்பவர் முதல் மனைவி என்றால் சரிதான். எனது தகப்பானருக்கும் காளியம்மாளுக்கும் பிறந்த மக்கள் தான் வாதி, 2, 3 பிரதிவாதிகள் என்றால் சரிதான். எனது தகப்பனார் கருப்பையாவின் இரண்டாவது மனைவி பெயர் காந்திஎ ன்றால் சரிதான். எனது தகப்பானருக்கும் காந்திக்கும் பிறந்தவர்கள் நான் மற்றும் 5 ம் பிரதிவாதி என்றால் சரிதான்.

3.வாதி தரப்பில் இந்த நீதிமன்றத்தில் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதியின் தாயார் காளியம்மாள் 07.09.1964 தேதி இறந்துவிட்டார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. வாதி 04.07.1961 ஆண்டு பிறந்துள்ளார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. நான் 1971 ஆண்டு பிறந்தேன். நான் 1971 ஆண்டு பிறந்ததற்கான ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தற்போது நினைவில் இல்லை.வாதியின் தாயார் காளியம்மாளுக்கு 60 பவுன் நகை அவரது வீட்டிலிருந்து போட்டார்கள் என்றால் இல்லை. நான் மேற்படி நகைகள் போடவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் என்னிடம் தெரிவித்துள்ளார். எனது தகப்பனார் எனக்கு நகைகள் போடவில்லை என்று தகவல் தெரிவித்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சகோதரி ராஜம்மாள் என்பவருக்கு அவரது தாயார் காளியம்மாள் இறந்தபின்பு அவரது பணத்தை கொண்டு அரசூர் கிராமத்தில் சொத்து கிரையம் வாங்கப்பட்டது என்றால் இல்லை.

4.ராஜம்மாள் இளவராக இருந்த காலத்தில் 21.09.1968 வருடம் அவரது பெயரில் சொத்துகள் கிரையம் வாங்கப்பட்டுள்ளது என்றால் நான் 1971 ஆண்டு தான் பிறந்தேன்

அதனால் அந்த விவரம் எனக்கு தெரியாது. ராஜம்மாள் பெயரில் சொத்துகள் வாங்கிய விவரத்தை என து தகப்பானர் என்னிடம் தெரிவித்தாரா என்றால் இல்லை. மேற்படி 1968 ஆண்டு கிரையம் பெற்ற சொத்து இளவர் ராஜம்மாளின் ஐவேஸ்யை கொண்டு கிரையம் பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அந்தவிவரம் எனக்கு தெரியாது. அரசூரில் குருப்பில் உள்ள மேற்படி 07 இலக்க சொத்துகளுக்கு ராஜம்மாள் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். ஆனால் அதன் விவரம் எனக்கு தெரியாது. மேற்படி 7 இலக்க சொத்துகளுக்கு பட்டா எண் 373ல் 2ம் பிரதிவாதி ராஜம்மாள்பெயரில் பட்டா உள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி 7 இலக்க சொத்துகளை எனது சகோதரி ராஜம்மாள் தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது.

5.நான் வழக்கிற்காக 2ம் பிரதிவாதி ராஜம்மாள் அனுபவம் செய்து வரும் விவரத்தை தெரியாது என்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.மேற்படி சொத்துகள் அமைந்துள்ள இடமே எனக்கு தெரியாது. தாவா சொத்தில் வாதி இளரவாக இருந்த காலத்தில் அவரது ஐவேஸ்யை கொண்டு வடபகுதி 4 ஏக்கர் 50 சென்டை குழந்தையம்மாள் என்பவரிடமிருந்து 22.07.1978ல் அவரது தகப்பனார் Guardian ஆக இருந்து கிரையம் வாங்கினார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் வாதி இளரவாக இருந்த காலத்தில் அவரது ஐவேஸ்யை கொண்டு தென்பகுதி 4 ஏக்கர் 50 சென்டை ஆகத்தம்மாள் என்பவரிடமிருந்து 22.07.1978ல் அவரது தகப்பனார் Guardian ஆக இருந்து கிரையம் வாங்கினார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. மேற்படி 9 ஏக்கர் சொத்தும் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் கிரையம் பெற்ற சொத்து. மேற்படி இரண்டு இலக்க சொத்துகளும் இளவர் வாதியின் ஐவேஸ்யை கொண்டு கிரையம் பெறப்பட்டது என்றால் இல்லை. வ.சாஆ,.1 மற்றும் வ.சா.ஆ.2 ஆணவங்களில் மேற்படி இளவரின் ஐவேஸ்யை கொண்டு சொத்துகள் கிரையம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆவணங்களின் விவரம் எனக்கு தெரியாது. எனது தகப்பனார் தான் சம்பாதித்து தான் அந்த சொத்துகளை வாங்கியதாக என்னிடம் தெரிவித்தார்.

6. மேற்படி எனது தகப்பானர் வியாபா்ரம் செய்து வந்த வருமானத்தை வைத்து சொத்துகள் வாங்கியதாக எனது எதிர் வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் தெரிவிக்கவில்லை என்றால் எனக்கு நினைவில் இல்லை. எனது தகப்பனார் எதிர் வழக்குரையில் மேற்படி விவரத்தை எதிர் வழக்குரையில் தெரிவிக்கவில்லை என்றால் நினைவில் இல்லை. தாவா சொத்திற்கு தெற்கே உள்ள 2 ஏக்கர் 68 சென்ட் நிலத்தை குழந்தையம்மாள் என்பவரிடமிருந்து எனது தகப்பனார் 22.07.1978 தேதி கிரையம் பெற்றார் என்றால் அந்தவிவரம் எனக்கு தெரியாது. வ.சா.ஆ.10 ஆவணத்தில் கண்டுள்ள சொத்திற்கு வடக்கு நான்குமாலாக ஆகத்தம்மாள் நிலம்என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றல் அந்த விவரம் எனக்கு தெரியாது. மேற்படி ஆகத்தம்மாளின் நிலத்தை தான் 22.07.1978 தேதியிட்ட வ.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் வாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் அந்த விவரம் எ னக்கு தெரியாது. தாவா சொத்துகள் புஞ்சை நிலம் என்றால் சரிதான்.தாவா சொத்தின் ஒரு பகுதி சொத்தை வாதி மேஜராக இருந்த நிலையில் எனது தகப்பனார் கிரையம் கொடுத்தார் என்றால் இல்லை. எனது தகப்பனார் வாதியின் சொத்தை வாதியின் அனுமதி இல்லாமல் இந்த வழக்கில் கண்டுள்ள 6 முதல் 35 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் எனது தகப்பனார் கிரையம்பெற்ற சொத்தை அவர் கிரையம் கொடுத்துள்ளார்.

7. எனது தகப்பனார் தாவா சொத்தின் பகுதியை கிரையம் கொடுப்பதற்கு அவருக்கு எந்த வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வாதி தாவா சொத்தை விற்பதற்கு எனது தகப்பானருக்கு எந்த பவர் ஆவணமும் எழுதி கொடுக்கவில்லை என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. மேற்படி எனது தகப்பனாருக்கு பவர் ஆவணம் எழுதி கொடுத்தாரா என்று எனது தகப்பனாரிடம் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் பகுதியில் எனது தகப்பனார் 6 முதல் 35 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்து அதில் சிலர் வீடு கட்ட முற்பட்டபோது வாதி அதை தடுத்தார் என்றால் இல்லை.நான் மேற்படி வாதி தடுக்க வில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வாதி தடுத்தும் அதை மீறி சிலர் வீடு கட்டியதால் எனது தகப்பனார் மற்றும் அந்த நபர்கள், என்னையும் சேர்த்து ராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS 313/1994 வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் நான் 4 ம்

பிரதிவாதி என்றால் அந்த வழக்கு விவரம் எனக்கு தெரியாது. மேற்படி வழக்கானது

திருவாடானை உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு OS 252/1995 என கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது என்றால் இந்த வழக்கின் விவரம் எனது தகப்பனாரின் மறைவிற்கு பிறகு தான் எனக்கு தெரியவந்தது. அதற்கு முன்பு தெரியாது. இந்த வழக்கானது முறையாக மதிப்பீடு செய்யப்படவில்லை என்று மனு தாக்கல்செய்யப்பட்டு மனுவின் அடிப்படையில் வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. அதன்பின் AS 46/2006 என வாதி தரப்பில் மேல் முறையீடு தாக்கல்செய்யப்பட்டு 23.02.2007 தேதி அனுமதிக்கப்பட்டு மீண்டும் OS 252/1995 விசாரணைக்காக திருவாடானை உரிமையியல் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றால் அந்தவிவரம் தெரியாது. அதன்பின் மேற்படி பணவரையறை தொடர்பாக மனு தாக்கல்செய்யப்பட்டு மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு வழக்கு திருப்பப்பட்டது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது.

மேற்படி முடிவை ஆட்சியபித்து வாதி CMA 2/2009 ல் மேல் முறையீடு தாக்கல் செய்தார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. மேற்படி CMA 2/2009 2011 ஆண்டு அனுமதிக்கப்பட்டு இந்த வழக்கானது விசாரணைக்காக மீண்டும் திருவாடானை உரிமையியல் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. மேற்படி முடிவை ஆட்சியபித்து உயர்நீதிமன்றத்தில் நாங்கள் மேல்முறையீடு செய்தோம் என்றால் எனக்கு நினைவில் இல்லை.

8. மேற்படி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ரிவிசன் மனு 01.04.2019 தேதி தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. மேற்படி தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவை ஆட்சியபித்து நாங்கள் எந்த மேல்முறையிடும் செய்யவில்லை என்றால் எனக்கு நினைவில் இல்லை. சர்வே எண் 44/2ல் கண்டுள்ள சொத்தில் ஒரு பகுதி சொத்தை பொறுத்து நான் தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கியில் கடன் பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

(ஓம்/திரு.J.அந்தோணி ரிஷான்தேவ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை